தேசிய நினைவெழுச்சி நாள் - லண்டன்

தமிழரின் கலாச்சாரம் பேணல்

“மூத்தோரை மதித்தலும், மரியாதை செய்தலும்” - தமிழ் மக்களின் பாரம் பரிய பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் செயல்களாகும். இந்த வகையிலே கடந்த 12-11-2008 வெம்பிலி “சிவாஸ்” உணவகத்திலே ஹரோ தமிழ்ச்சங்க முதியோருக்கு தீபாவளி மதிய விருந்து அளிக்கப்பட்டது. உணவகப் பொறுப் பதிகாரி திரு பிரதீப் அவர்கள் மூத்தோரை மதித்து வரவேற்று மிகவும் சலுகையோடு சுவையான சிற்றுண்டி களையும், மதிய உணவையும் விநியோகஞ் செய்தார். சுமார் 50 அங்கத்தவர்கள் இந்நிகழ்வில் பங்கு கொண்டனர்.

தாயக உறவுகளின் பரிதாப நிலைமையை நினைவு கூர்ந்து பேசிய பிரதம விருந்தினர் திருமதி புனிதா பேரின்பராசா சங்கத்தின் முன்னேற்றத்தைப் பாராட்டினார். பார்னட் தமிழ் முதியோர் பொழுதுபோக்குக் கழகத் தலைவி திருமதி பத்மா குணசிங்கம் சங்க அங்த்தவர்களின் ஆர்வம், ஈடுபாடு போன்றவை தம்மை மிகவும் கவர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டார். வேறு அங்கத் தவர்களும் மதிப்புரை கூறி பாட்டுக்களும் பாடினர் தலைமை தாங்கி நடாத்திய திருமதி குணா வேலுப்பிள்ளை அவர்கள் மூத்தோரை மதித்து உபசரிக்கும் தனவந்தர்களை நன்றியுடன் பாராட்டிக் கௌரவிக்க வேண்டியது எமது கடமை என்றும் குறிப்பிட்டார். அங்கத்தவர் திரு.எம் நடேசன் அவர்களின் முயற்சியில் இவ்நிகழ்வு நடைபெற்றது

பட்டமளிப்பு விழா

லண்டன் வெம்பிளியில் கீழைத்தேய பரீட்சைச் சபையின் பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. கீழைத்தேய பரீட்சைச் சபை நடாத்திய இந்தப் பட்டமளிப்பு விழாவில் 34 மாணவ மாணவிகள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவ் பட்டமளிப்பு விழாவில் திரு பத்மநாதன் தம்பதியினர் முக்கிய அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

பட்டமளிப்பு விழாவில் திரு கலாதரன் தயாரிப்பில் தமிழ்த்தாய் வணக்கமும், ஸ்ரீமதி பகவதி ஜனார்த்தன ஐயர், சங்கீத வித்துவான் ஏ.ஞானசுந்தரம், ஸ்ரீமதி வி.ஆறுமுகசாமி, புல்லாங்குழல் வித்துவான் ரி.ராகவராம், ஸ்ரீமதி செய்மணி சிறிதரன், ஸ்ரீமதி விநோதினி சண்முகநாதன், மதி விநோதினி பரதன், ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜா ஆகிய இசைநடன ஆசிரியர்களின் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் மிக நேர்த்தியாக இடம்பெற்றிருந்தன

SRI DURGA MATHA FACE READING & ASTROLOGY CENTRE

Pandit Arjun Raju & Mrs Subbamma

Indian Famous Scientific Palmistry and face reading Pandit stayed in your country. An expert Palmist at your service. You will come to know about your past, present and future by hand prediction, horoscope intending persons ,ay contact for job, family matters, husband and wife relationship, love, education, business. Choice of stones, sickness, promotions, family problems, children problems, visas, money, purification ceremonies for obtaining wealth etc. Wicth craft will be cleared by performing poojas and Devi Upasanas, Lakshmi Pooja, Prayers and protection from enemies. உங்கள் முகத்தைப் பார்த்தே நீங்கள் நினைப்பதை சொல்ல முடியும் . Quick herbal remedies to: BP, Diabetes, Asthma, Cancer, Joint pains, Stomach problems, Sexual problems, Cold problems and all other types of diseases.

“Awhile of the rare and best opportunity” Spoken Lajnguages: Hindi, English, Tamil and Telugu
Pandit Arjun Raju **FCC Super STORE** 158, Green Street, Forest Gate, Upton Park E7 8JT (opp Dipesh Jewellers)
Opening hours: 10.am – 8.00pm 7 days a week
Conatct: 07529 426 891, 07529 301 752, 020 8548 4698